
# உலகளாவிய தமிழ் - காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும்

தொகுதி-2




பதிப்பாசிரியர்கள்

முனைவர் இரா. இளவரசு

முனைவர் க. சிவனேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் கே. சுபாஷினி

## உலகளாவிய தமிழ் - காலந்தோறும்
## தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும்
(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் இரா. இளவரசு<br>முனைவர் க. சிவனேசன்<br>முனைவர் சு. குமரன்<br>முனைவர் கே. சுபாஷினி |
| பதிப்புரிமை | : | தமிழ்த்துறை<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி<br>சிவகாசி |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2017 |
| வெளியீடு | : | பாடத்திட்ட மேம்பாட்டு அமைப்பு<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி<br>சிவகாசி |
| கணினி | : | ஆகாஷ் கம்ப்யூட்டர்ஸ், திருத்தங்கல் |
| அச்சாக்கம் | : | கலா ஆப்செட் காலண்டர்ஸ், சிவகாசி |
| பக்கங்கள் | : | 484 |
| விலை | : | ரூ.350/- |

**ISBN No. : 978-93-83191-27-7**

## International Conference on
## WORLD WIDE TAMIL - CONCEPTS AND INNOVATIONS IN TAMIL LITERATURE THROUGH THE AGES

| | | |
|---|---|---|
| Editors | : | Dr. R. Elavarasu<br>Dr. G. Sivanesan<br>Dr. S. Kumaran<br>Dr. K. Subashini |
| Copyright's | : | Department of Tamil<br>Ayya Nadar Janaki Ammal College, Sivakasi |
| First Edition | : | December, 2017 |
| Published by | : | Curriculum Development Cell<br>Ayya Nadar Janaki Ammal College, Sivakasi |
| Computer | : | Akash Computers, Thiruthangal |
| Printed by | : | Kala Offset Calendars, Sivakasi Ph: 9486177224 |
| Pages | : | 484 |
| Price | : | Rs. 350/- |

| | | |
|---|---|---|
| 138. | கவிதைகளின் பொருண்மை மாற்றம்<br>**பா.ல. மாலதி** | 632 |
| 139. | மணிமேகலையில் புறமரபு<br>**முனைவர் சோ.முத்தமிழ்ச்செல்வன்** | 636 |
| 140. | வாலியின் படைப்புகளில் கவிதைக் கலை<br>**முனைவர் சி. முத்துச்செல்வி** | 641 |
| 141. | நற்றிணைக் குறிஞ்சியும் தலைவியின் களவுப் பொருண்மைப்பாடும்<br>**முனைவர் ஆர். முத்துராஜன்** | 645 |
| 142. | புறநானூற்றில் பண்பாட்டின் மெய்க்கோள்கள்<br>**வே. முத்துமாரி** | 649 |
| 143. | நகைச்சுவை விளக்கமும்... விவரணைகளும் புதுக்கவிதையின் ஊடாக...<br>**பேராசிரியர் P. முருகன்** | 653 |
| 144. | ஜெயகாந்தனின் "கருணையினால் அல்ல" நாவலில் கருணைபற்றிய சிந்தனை<br>**வீரா. முருகானந்தம்** | 658 |
| 145. | பாலை இடைச்சுரத்தில் விலங்குகள் பற்றிய புனைவு<br>**வே. முரளிகிருஷ்ணன்** | 661 |
| 146. | பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் - பார்வை<br>**ஆ. முருகேசன்** | 666 |
| 147. | கவிதாசனின் வெற்றிப்பூக்களில் விரியும் நறுமணங்கள்<br>**முனைவர் க.முருகேசன்** | 670 |
| 148. | ஆய்தம் பெறும் இடம்<br>**ச. முருகேசன்** | 675 |
| 149. | இலக்கியங்களில் ஊழ்வினைக் கோட்பாடு<br>**இர. மேனகாதேவி** | 679 |
| 150. | திருவள்ளுவர் அகப்பொருள் நெறி<br>**முனைவர் கு.மோகனராசு** | 684 |
| 151. | கவிதாசன் பார்வையில் வாழ்வியல் சிந்தனைகள்<br>**அ. ரஞ்சனி** | 688 |
| 152. | காலனிய ரேகைச் சட்டமும் இனக்குழுக்களின் அடையாள அரசியலும்<br>**ந. இரத்தினக்குமார்** | 692 |
| 153. | தல மரங்களும் கோயில்களும்<br>**நா. ரமணிசேகர்** | 698 |
| 154. | காலங்காலமாக தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும் ஐவகை நிலங்களும் ஐந்திணை அழகியலும் ஒப்பீடு<br>**ஜி.ஆர். ராமதிலகம்** | 703 |

# 147 கவிதாசனின் வெற்றிப்பூக்களில் விரியும் நறுமணங்கள்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029

மானுட உயிர்களுக்கு இறைவனால் அருளப்பெற்ற அற்புதமான வாழ்வென்பது மிகக் குறுகிய காலஎல்லையைக் கொண்டதுதான். அக்குறிப்பிட்ட காலத்தில் தன்னுடைய மனவயலில் முகிழ்த்தெழும் எண்ணங்களுக்கு அரும்பாக, மலராக, தளையாக, கொடியாக, கிளையாக, காயாக, கனியாக வடிவம் கொடுத்து அவற்றைச் சமூகத்தின் வளர்ச்சிப் பாதையில் படிக்கற்களாகக் கட்டமைக்கக் கூடிய படைப்பாளிகளில் முதல் வரிசையில் முகமலர்ந்து நிற்பவர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன். "இலட்சியவாதிகளை உருவாக்குவதே எனது இலட்சியம்" என்ற குறிக்கோள் வாழ்க்கையைத் துணைக்கோலாகக் கரம்பிடித்து எழுச்சிநடை போடும் கவிஞரின் கவிதைப் படைப்பாகிய 'வெற்றிப்பூக்கள்' எனும் நூலில் பதிவாக்கப்பட்டுள்ள சமூக முன்னேற்றச் சிந்தனைகளைப் புலப்படுத்திக் காட்டுவதும், கவிஞரின் படைப்பாளுமைத்திறனை மதிப்பீடு செய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தன்னம்பிக்கைப் பயணம்

"மானுடச் சமூகத்தைக் காலந்தோறும் உயர்த்திக்கொண்டே இருப்பதுதான் கவிதையின் வேலை. கவிஞன் காலத்தின் அறைகூவல் கவிதையோ காலத்தின் கண்ணாடி. சமகாலத்தை எழுதாத கவிஞனைக் காலம் தூசியைப் போலத் துடைத்தெறிந்துவிடும். இன்றைய கவிதை போராட்டக் கவிதையாக இருக்க வேண்டும். அதன் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு போர்வீரனாக இருக்க வேண்டும்" என்கிறார் விளாதிமீர் மாயாகோவ்ஸ்கி(கவிதை இயற்றுவது எப்படி,ப.60)

"ஒரு நல்ல கவிதை என்பது எளிமையாகவும், உள்ளத்தைத் தொடுவதாகவும், உண்மையைச் சொல்வதாகவும் அமைய வேண்டும்" என்பார் சீனக் கவிஞர் ஐகுங்.

மனிதன் என்பவன் மகத்தானவன்."வாழ உதிர்ந்துபோகும் மலராகவோ, ஒடி ஒளியும் இருளாகவோ, உருகி மறையும் பனியாகவோ, கரையில் கரையும் அலையாகவோ உன்னை நீ நினைத்துக் கொள்ள வேண்டாம்"எனக்கூறும் கவிதாசன்,

**"நீ காற்றையே திசைமாற்றும் சுனாமி!**
**நீ நெருப்பை விழுங்கிய சூரியன்!**
**நீ அக்னியை உமிழும் எரிமலை!" (வெற்றிப் பூக்கள், பக்.11-12)**

என்று உற்சாகமூட்டி மனம் சஞ்சலமடைந்து கிடப்போரைத் தூக்கி நிறுத்தி வாழ்வைச் சுவைக்கத் தூண்டுகின்றார். தன்னம்பிக்கை இருப்பவனுக்கு இமயம்கூட இடுப்பளவுதான். ஆதலால் கவலைப்பட்டுக்